# ஒன்றாக வளர்வது மிகவும் சிறந்தது

## 4.2 இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்




**வேத வசனம்:** **இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்.எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள். அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது.**

*1 தெச.5:17,18*



**அறிக்கை:** **நாம் எதற்கும் கவலைப்படாமல் ஸ்தோத்திரத்தோடே ஜெபம் செய்வோம்.**

**சத்தியம்:** நீங்கள் எதற்கும் கவலைப்படாமல் எல்லாவற்றையும் ஸ்தோத்திர ஜெபத்தினால் தேவனுக்குத் தெரியப்படுத்தவும், இடைவிடாமல் ஜெபிக்க பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்திருக்கவும் கர்த்தர் சொல்லியிருக்கிறார்.

### வேதப் பகுதி: தானியேல் 10:1-21

**பாடம்**

**1. தேவன் ஜெபத்தின் முக்கியத்துவத்தைச் சொல்லியிருக்கிறார்:** உலகப் பெற்றோர் தங்கள் பிள்ளைகள் தங்களுடன் பேசுவார்கள், தாங்கள் சொல்லுவதைக் கவனிப்பார்கள் என்று எதிர்பார்த்து அவர்கள் மேல் தங்கள் அக்கறையைச் செலுத்துகிறார்கள். அதுபோலவே நம்முடைய பரலோக தகப்பன் தமது மக்களுடைய ஜெபங்களைக் கேட்டு மகிழ்கிறார். இது தேவன் மனிதருக்குத் தரும் ஓர் அற்புதமான மரியாதை. இயேசு சொன்னார், “இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை. கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்”. “கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும். தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள். தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்”. (யோவான் 16:24, லூக்கா 11:9-13)

**2. ஜெபத்தின் வகைகள்:** ஜெபம் என்பது தேவனிடம் வேண்டுவது மட்டும் அல்ல. தேவனுக்கு நன்றி செலுத்துவது, நம் தவறுகளை ஒப்படைப்பது, கர்த்தரை ஆராதித்துப் பாடுவது ஆகியவை அனைத்துமே ஜெபம் செய்வது ஆகும். காலையிலிருந்து பரலோக தகப்பனுக்கு நன்றி செலுத்துவோம். அவருக்கு முன் நம் இருதயங்களைத் திறந்து வைப்போம், எல்லா நிகழ்வுகளுக்காகவும் ஜெபிப்போம். பரிசுத்தவான்களுக்காகவும் தலைவர்களுக்காகவும் வேண்டுதல் செய்வோம். அரசர்களுக்காகவும் அதிகாரத்தில் உள்ள அனைவருக்காகவும் ஜெபிக்கும்படி வேதப்புத்தகம் நமக்குப் போதிக்கிறது.

**3. இடைவிடாமல் ஜெபிப்பதால் வரும் ஆசீர்வாதங்கள்:** தேவனாகிய கர்த்தர் ஜெபங்களைக் கேட்கிறவர். மெய்யாகவே அவரை நோக்கிக் கூப்பிடுகிறவர்களின் அருகாமையில் அவர் இருக்கிறார். ஆகையால் தேவனுடைய பிரசன்னத்திற்குள் செல்ல ஜெபமே சிறந்த வழி. சில வேளைகளில் தேவனுடைய பதில் வருவதற்குச் சில நேரம் எடுத்துக்கொள்ளும். தானியேல் 10:12 ல் தானியேல் 21 நாட்கள் ஜெபிக்கும்படியாகத் தன் இருதயத்தைத் திருப்பி ஜெபிக்கத் துவங்கியபோது ஆச்சரியவிதமாக தேவ தூதன் வழியாக அவருக்கு பதில் வந்தது. தேவன் அவருடைய வேளையில் அவருடைய சித்தத்தின்படியாக நம்முடைய அனைத்து ஜெபங்களுக்கும் பதில் தருகிறார். ஆகையால் நாம் இடைவிடாமல் ஜெபிக்க வேண்டும்.

**4. ஆவியிலே ஜெபம் பண்ணுங்கள்:** அவருடைய ஜெபத்தில் தானியேல் ஓர் இயற்கைக்கு மாறான தடையைச் சந்தித்தார். தேவனுடைய விசுவாசிகளுக்கும் இதுபோல நடக்கும். சில வேளைகளில் நம் இருதயம் ஜெபிக்க இடம் தராது, இன்னும் சில வேளைகளில் நம் மனம் ஜெபத்திற்குள்ளே செல்லாது. ஆனால் வேதப்புத்தகம் சொல்லுகிறது, “ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல்செய்கிறார்”. இதைத்தான் நாம் “ஆவியில் ஜெபித்தல்” என்று சொல்லுகிறோம். பரிசுத்த ஆவியானவர் நம்மைப் பெலப்படுத்தவும் தேவனுடன் நாம் பேசவும் நமக்கு உதவி செய்கிறார். (ரோமர் 8:26-27)

**முடிவுரை:** தேவன் கிருபையாக நம் ஜெபங்களைக் கேட்க விரும்புகிறார். இளம் சாலொமோன் ஞானத்திற்காகவும் புரிந்துகொள்ளுவதற்காகவும் ஜெபித்தபோது தேவன் செல்வத்தையும், மதிப்பையும் ஆரோக்கியத்தையும் கொடுத்தார். அதுபோல நாமும் நம் ஆவியில் ஜெபித்து தேவனுடன் ஜெபத்தில் தரித்திருப்போம்.

**ஜெபம் / அழைப்பு:** இன்றைய சத்தியம் நமது இருதயங்களில் எழுதப்படும்படி இயேசுவின் நாமத்தினால் ஜெபியுங்கள்.